உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவம்

மலர் 1.] || இராக்ஷசஸு மார்கழிமீ 1915ஸு டிசம்பர்மீ || [இதழ் 12.

பெரிய புராணம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

பொன்னனையார் சரித்திரம்.

பாண்டிவள நாட்டிலே, மதுரைமா நகருக்குச் சமீபத்திலே, திருப்பூவணம் என்னும் சிவதல மொன்றுண்டு. அதிலுள்ள சராசரங்களெல்லாம் சிவலிங்கமூர்த்தங்களென்று தேவர்களும் பாதபரிசம்படாமல் அதை அந்தரத்திலேயே பிரதட்சிணஞ் செய்துகொண்டு போவார்கள். அத்தலத்திலிருந்த பரத்தையர்களுள் பொன்னனையார் என்பவ ரொருவர் இருந்தார். அவர் தம் பெயருக்கேற்ப அழகில் இலக்குமியை யொத்தவர். குரலில் குயிலைப் பழித்தவர். நடையில் அன்னத்தை வென்றவர். இசை நூலின்படி யாழ் வாசிப்பதிலும் கீதம் பாடுவதிலும், பரதநூலின்படி நாட்டியஞ் செய்வதிலும் அரம்பை முதலிய தேவமாதரை யொத்தவர். சிவபத்தி சிவனடியார்பத்திகளால் தேவர்களும் வணங்கும் பெருமையர். அவ்வம்மையார் தமக்குவாய்த்த சரீரம் அழகு இளமை செல்வம் முதலியனவெல்லாம் சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்குமே உரியனவாகவெண்ணி யொழுகும் ஒழுக்கத்திற் சிறந்து விளங்குவாராயினார். அவர் தினந்தோறும் பொழுதுவிடியுமுன் சிவத்தியானத்தோடு நித்திரைவிட்டெழுந்து நீராடச்செல்வர். நீராடுந் தடாகத்தையடைந்து அதில் இடையிடையே விரவிப் பூத்திருக்கும் நீலோற்

பல மலர்களாலும் செந்தாமரை மலர்களாலும் அது அம்மையப்பரை யொத்திருத்தலைநோக்கி யகங்குழைவர். அவ்வம்மையப்பருடைய அருள்வெள்ளத்தில் திளைப்பவர்போல் அவர்களைச் சிந்தித்துச் சிந்தித்துச் சீதப்புனலாடுவர். நீராடியபின், ஓதவொண்ணுக்காத லோடும் பசுமலமகற்றும் பால்வெண்ணீறணிந்து, திருப்பூவணநாதர் திருக்கோயிலை யடைந்து, விதிப்படிப் பிரதட்சிண நமஸ்காரங்கள் செய்து, தமது கைப்போதுகொண்டு அப்போதுகொய்த நறுமணங் கமழும் நாண்மலர்களால் அம்மையப்பருக்கு அருச்சனைகள் புரிவித்து, மனங்கசியவும் என்பு நெக்குருகவும் கண்கள் ஆனந்தவருவி சொரியவும் இனிய கீதம் பாடித் தோத்திரஞ்செய்வர். பாடகச் சீறடிப் பாரபரை மகிழ ஆடகச் சபையில் நாடகம் புரியும் பூவணத் தமர்ந்த புண்ணியனுர்முன் நாட்டியஞ்செய்வர். இவ்வாறு இறைவனுரை வணங்கி அவரைவிட்டுப் பிரியமாட்டாத சிந்தையராய்த் தமது வீட்டுக்குத் திரும்பிச் சென்று சிவனடியார்களைப் பூசிப்பர். சிவசின்னங்கள் தரித்தவர்கள் யாவராயினும் அவர்களைக் கண்ட போதே கன்றைநோக்கிச்செல்லுங் கறவையென ஆசையோடு எதிர் கொண்டு சென்று உபசாரவார்த்தைகளைப் பேசி, தமது வீட்டுக் கழைத்துச் சென்று பூசித்து, திருவமுது செய்வித்து, அவர்கள் உண்டு எஞ்சியதைத் தாம் உண்பர். அவர் இவ்வாறு இடைவிடாமற் செய்துவந்த வழிபாட்டினுல் நாளடைவில் அவர் சிந்தனையெல்லாம் சிவசிந்தனையாய் மாறியது. அவர் பேசியதெல்லாம் சிவதோத்திரமாய்த் திரிந்தது. அவர் செயலெல்லாம் இறைபணியாயது. இவ்வாறு அவருடைய திரிகரணங்களும் சிவகரணங்களாய்த் திரிகரணங்களாயின. அவ்வாருதலும், மெய்யன்பர்களின் "உள்ளங் கவர் கள்வன்" ஆகிய பூவணத்திறைவர் அவருடைய மெய்யன்பை உலக மறியச்செய்து அவரை யாட்கொள்ளத் திருவுள்ளங்கொண்டு, அவருக்குத் தமது திருவுருவத்தைச் செய்து பூசிக்கவேண்டுமென்னும் விருப்பத்தை யுண்டாக்கி யருளினர். அவ்விருப்பமானது அவர் இறைவனுரிடத்தில் வைத்த அன்பைப்போல் அவர் உள்ளத்தில் வேரூன்றி மேன்மேலும் முறுகி வளர்ந்தோங்கியது. ஆதலால், அம்மையார் ஓர் நன்னுள் குறித்து தமது கருவாதனையொழிக்குங் கண்ணுதற்பெருங் கடவுளுடைய திருவுருவத்தைச் சமைப்பதற்குக் கருக்கட்டி வைத்துக்கொண்டு பலமுறையும் அதில் உலோகத்தை யுருக்கி யூற்றித் திருவுருவஞ்சமைக்க முயன்றனர். முயன்றும், அவருக்கு ஆடல்பாடல்களால் கிடைத்த பொருளெல்லாம் சிறிதும்

எஞ்சுதலின்றி சிவனடியார் பூசைக்கே செலவாய்க்கொண்டிருந் தமையால் அவர் எண்ணம் நிறைவேறவில்லை. அவர் சிவனடியார் பூசையில் வைத்த ஆசைக்கு ஓர் அளவிருந்தாலல்லவோ அவர் வரு வாயில் ஏதேனும் எஞ்சிநிற்கும்!

திருக்குறள்.

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

அவர் தமது விருப்பம் நிறைவேறப்பெறுமல் கவலைமேலிட்டு, அதனுல் நித்திரை வராமலும் உணவேற்றுக்கொள்ளாமலும் இருந் தனர். அதனுல் அவர் சரீரம் வாடிவிட்டது. சரீரம் வாடியும் சிவ னடியார்முன் அவர் முகம் வாடவில்லை. இறைவர் திருவுருவத்தைச் சமைக்கும் விருப்பமும் அவரைவிட்டு அணுத்துணையும் நீங்கவில்லை. ஆதலால், அவர் குலபூஷணபாண்டியனுக்கு எடுக்கவெடுக்கக் குறை யாத பொற்கிழி கொடுத்தருளிய சோமசுந்தரக்கடவுளைத் தமது விருப்பத்தை நிறைவேற்றியருளுமாறு பிரார்த்தித்துக்கொண்டு எப் போதும்போலவே சிவபூசையினுஞ் சிறந்த சிவனடியார் பூசையைப் பேரன்போடு செய்துவந்தனர். இத்தகைய வழிப்பாட்டின் முதிர்ச்சி யால் அவருக்கு இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாயின. உண்டாகவே, சோமசுந்தரக்கடவுள் அவருக்கு அருள் செய்ய வேண்டி, அவருடைய அன்பையே திருமேனியாகக்கொண்டு, அவ ருடைய உள்ளத்தைப்போற் பரிசுத்தமாகிய திருநீற்றைத் திரு மேனியெங்கும் உத்தூளனஞ்செய்து, ஒரு திருக்காத்தில் மழு வாயுதமும் மற்றொரு காதலத்தில் திருநீற்றுப்பையுங்கொண்டு, அரையில் யோகப்பட்டிகையுங் கோவணவாடையுந் தரித்து, பொன் போலும் புரிசடைவிளங்க, ஒரு சித்தமூர்த்தியா யெழுந்தருளி, பொன்னனையார் வீட்டில் திருவமுது செய்யச்சென்ற சிவனடியார்க ளோடு தாமும் ஒருவராகச் சென்று, அவர்களோடு திருவமுது செய் யாமல் வேறு காரியத்தை விரும்பிச் சென்றவர் என்னுங் குறிப்புத் தோன்ற வீட்டின் கடைவாயிலில் தனித்து ஒருபுறமாக இருந்தனர். அங்குச்சென்ற சிவனடியார்களெல்லாம் திருவமுது செய்து அவ்விட த்தைவிட்டு நீங்குதலும், அம்மையார் தமது ஏவற்பெண்களை யழைத் துத் திருவமுது செய்தற்குச் சிவனடியார்கள் இன்னும் யாரேனும் உளரோவெனப் பார்த்துவரும்படி யனுப்பினர். அவர்களவ்வாறே சென்று பார்க்கச் சித்தமூர்த்திகளைக் கண்டு வணங்கி "ஐயரே,

தேவரீர் உள்ளேயெழுந்தருளித் திருவமுது செய்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். சித்தமூர்த்திகள் "நீங்கள் அழைத்தால் நாம் வாரோம். மரியாதையின்றி வேலைக்காரரை யனுப்பிச் சிவனடியார்களையழைக்கும் உங்கள் எசமானியை இங்கே அழையுங்கள்" என்றார். அதைக்கேட்டு அவர்கள் பொன்னனையாரிடம் சென்று "அம்மணி, ஒருவர் தவிர மற்றவர்களெல்லாம் திருவமுது செய்து போயினார்கள். யாரோ வொருவர் சித்தரைப்போலிருக்கிறார். இவரைப்பார்க்கப்பார்க்க மனம் பரவசமாகிறது. இவர் இவ்வுலகில் கிடைத்தற் கரியவரா யிருக்கிறார். இவர் எங்களைச் சிறிதும் சட்டைசெய்பவராயில்லை. இவரை நாங்கள் அழைத்தால் இவர் தங்களை யழைக்கிறார்" என்றார்கள். அம்மையார் அதைக்கேட்டு உடனே யோடிச்சென்று அவருடைய பாததாமரைகளைத் தமது சிரசிற் சூட்டிப்பணிந்து அவருடைய திருமேனிப் பொலிவுகண்டு மெய்ம்மறந்து அஞ்சலித்து நிற்க, இறைவனார் அவரை யருட்கண்ணால் நோக்கினார். நோக்குதலும், அம்மையார் அவரருள் வலையிலகப்பட்டவராய் "சுவாமி, தேவரீர் அடியேன் உய்யுமாறு, உள்ளேயெழுந்தருளல் வேண்டும். தேவரீருக்கு வேண்டிய பணிகளைத் திருவுள்ளத்தினுக்கிசையச் செய்வேன்" என்றனர். இறைவனார் புன்னகைசெய்து "பாவாய், நீ பேரழகியாயிருக்கிறாய். எத்தகையரும் பலாப்பழத்தீயைப்போல் உன் கண்வலையிற் சிக்கிக்கொள்வார்கள். ஆதலால் உனக்குப் பொருள் வருவாய்க்குக் குறைவிராது. இவ்வாறிருந்தும், இட்டுண்ணாத லோபிகளைப்போல் உன் உடல் வாடி யிருப்பதேன்? நீ பணத்தைப் பாடுபட்டுத் தேடிப் புதைத்து வைக்கின்றாய்போலும். நீ எனக்கு என்னபணிவிடை செய்யப்போகிறாய்!" என்றனர். அம்மையார், "என் இறைவனே, அடியேன் உலோபத்தால் உடல் மெலியவில்லை. மனக்கவலையால் வாடினேன்" என்றனர். இறைவர் அம்மனக்கவலை யாதெனக் கேட்க, அம்மையார், "அடியேன் நம்பிறைவனாருடைய திருவுருவத்தைச் சமைத்துப் பூசிக்க விரும்பி நெடுங்காலமாகக் கருக்கட்டி வைத்துக்கொண்டிருக்கிறேன். அடியேனுக்குக் கிடைக்கும் பொருளெல்லாம் தங்கள் போன்ற சிவனடியார் பூசைக்கே போதாமலிருப்பதனால் என்விருப்பம் நிறைவேறாமல் கவலையிருந்து உடல் வாடினேன்" என்றனர். முதல்வனார் அம்மையாருடைய அமுதவசனத்தைக் கேட்டு "முத்தனைய மூரலாய், அப்படியா!, இது எனக்குத் தெரியாமற் போய்விட்டது. நீ நல்ல சரீரம், அழகு, இளமை, செல்வம் ஆகிய இவை

களையெல்லாம் உடையவளாயிருந்தும் இவைகளிலேயே பற்றுவைத்துப் பாழாகாமல், இவைகள் நீரிற்குமிழிபோல் நிலையில்லாதனவென்பதை யுணர்ந்து, தீவினையணுகாவண்ணம் அறநெறி யொழுகினுய். அறநெறியுள்ளும் அரனெறி யதிகமென்றோர்ந்து சிவபூசையை யிடைவிடாமற் செய்தனை. சிவ பூசனையினும் சிவனடியார் பூசனை யதிகமென்றறிந்து, அளவுபடாத வன்போடு சிவனடியார்களைப் பூசிக்கின்றாய். ஆதலால், நீயே மண்ணினிற்பிறந்தார் பெறும்பயனைப் பெற்றவள். பொன்னனையாள் என்னும்பெயர் உனக்குத் தகும் தகும். நீ விரும்பிய பொன்னார்மேனியன் திருவுருவத்தை உன் பெயருக்கேற்ப, பொன்னினலும்செய்து பார்க்கத் தகும். ஆதலால், உன் வீட்டிலுள்ள பித்தளை ஈயம் முதலிய உலோகங்களாற் செய்த உபயோகமற்ற பாத்திரங்களைக் கொண்டுவா" என்றனர். அம்மையார் அடங்காப் பெருமகிழ்ச்சியோடு போய் தம்மிடத்திருந்த ஈயம் செம்பு இரும்பு பித்தளை வெள்ளி வெண்கலம் தரா முதலிய உலோகங்களைக் கொண்டுவந்து இறைவனார்முன் கலகலவெனக் கொட்டினார். இறைவர் அவைகள் பொன்னுகுமாறு சிந்தித்து அவைகளின் மீது திருநீற்றைத் தூவி அம்மையாரைப்பார்த்து "இவைகளை யின்றிரவில் புடம்போட்டெடுத்தால் மாற்றுயர்ந்த பொன்னாகும். அதைக் கொண்டு நீ விரும்பிய இறைவரது திருவுருவத்தைச் செய்துகொள்" என்று கூறியருளினார். இறைவர் அம்மையார் வீட்டுக்கெழுந்தருளியபோது அங்குச்சென்ற சிவனடியார்களோடு தாமும் கலந்து திருவமுது செய்யாமல் வேறு சிந்தனைகொண்டு சென்றவர்போற் காணப்பட்டமையால், அவர் தம்மிடம் கலவியின்பத்தை விரும்பி வந்திருக்கலாமென்று அம்மையார் சந்தேகித்து, அச் சந்தேகத்தை வெளிப்படையாய்ச் சொல்லமாட்டாமல் *குறிப்பாயுணர்த்த

* அம்மையார் தமது அபிப்பிராயத்தைக் குறிப்பாய் உணர்த்தினர் என்பதனைத் திருவிளையாடற் புராணத்தில் "கங்குல்வா யமுதருந்தி" என்னுஞ் சிலேடைச்சொற்றொடராலும், "பொங்கு காரிருள் புலருமுன் போம்" என்றதனுலும் அறிக.

அறிஞர் காமவேட்கையால் பரத்தையர்பாற் செல்வாராயின், பகை பாவம் அச்சம் பழிகளுக்குப் பயந்து பிறரறியாவண்ணம் செல்வது இயற்கையாதல் பற்றிப் பொழுது விடியுமுன் போய்விடலாம் என்றனர். இதனை

கந்தபுராணம்.

சால்வளை தரவுழும் வயலிற் றங்கிய
வால்வளை யினம்வெரீஇ யலவன் மாப்பெடைச்
சூல்வளை புகுவதங் கறிஞர் சூழ்விலைக்
கோல்வளை மகளிர்பாற் கூட்ட மொத்ததே,

என்றதனல் உணர்க.

விரும்பி, இறைவரைப்பார்த்து "என் ஆண்டவரே, அடியேனுடைய் கை சிவனடியார்க்கன்றி யெப்பணியுஞ் செய்யாது. என்கண் அரனடியாரையன்றி மற்றொன்றுங் காணாது. என்கொங்கை சிவனடியார் தோளையன்றி மற்றொருவர்தோளைச் சேராது. என்நா ஈசனடியாரோடன்றி வேறொருவருடன் வார்த்தை யாடாது. ஆதலால், என் உடல் பொருள் ஆவி மூன்றும் தேவரீருடைய உடைமைகளே. ஆதலால், தேவரீர் இன்றிரவு என்னிடம் தங்கி யமுதருந்தி என்னைப் பணிகொண்டு, இறைவர் திருவுருவத்தையுஞ் சமைத்துக் கொடுத்தருளி, பொழுது விடியுமுன் போய்விடலாம்" என்றனர். இறைவர் குறுநகை செய்து, "பொன்னனையாளே, நானிருக்குமிடம் வெகு தூரமன்று. அடுத்துள்ள மதுரைமாநகரம் நான் வசிக்குமிடம். அவ்விடத்தில் எனக்கு மனைவி மக்கள் மாடு வீடு முதலியனவெல்லாம் உண்டு. என் மனைவி அங்கயற்கண்ணி ஒருகணமும் என்னைவிட்டுப் பிரிந்திராள். நானும் அவளைவிட்டுப் பிரிவதில்லை. ஆதலால் நான் இரவில் இங்கு தங்க இயலாது" என்று கூறியருளி மறைந்தருளினார். இறைவனார் மறைதலும், அம்மையார் அளவிலா வற்புதமெய்தி, சித்தராய்வந்தவர் சிவபிரான் என்று தெரியாமற் போனதற்கும் அவர் மறைந்து போனதற்கும் மிக்க வருத்தமும், தமது எண்ணம் நிறைவேறப்பெற்றமைக்கு மகிழ்ச்சியும் அடைந்து, இறைவனார் கூறியருளியவாறு உலோகங்களையெல்லாம் சேர்த்து அக்கினியிற் புடம் போட்டனர். அப்போது அது அவ்வளவும் பத்தரைமாற்றுப் பசும் பொன்னாயது. அதைக்கொண்டு அம்மையார் தாம் விரும்பியவாறு இறைவர் திருவுருவத்தைச் சமைத்தனர். அத்திருவுருவம் அழகெல்லாந்திரண்டு ஓர்வடிவு கொண்டதுபோ லிருந்ததனால் அம்மையார் அதைக் கண்குளிரப்பார்த்து, தாயானவள் தான்பெற்ற குழந்தையின் அழகைக்கண்டு ஆசையோடு என் கண்ணே கண்மணியே எனப் பல கூறி அள்ளி முத்தமிடுவதுபோல், ஆசைமீதூர, "என் அழகிய பிரானே" வென்று கூறி அள்ளி முத்தமிட்டனர். பின்பு, தமது அன்புவடிவாயமைந்த அம்மூர்த்தியைப் பிரதிட்டை செய்து நித்தியபூசை நைமித்தியபூசை திருவிழா முதலியன நடத்திப் பூசித்துக்கொண்டிருந்து சிவகதியடைந்தனர். அம்மையார் அள்ளி முத்தங்கொண்டு அழகிய பிரானே என்றதனால் திருப்பூவணத்திறைவர் அவ்வம்மையார் கபோலத்திலிட்ட நகக்குறியையும் கூறிய காரணப் பெயரையுங்கொண்டு இக்கலியுகத்தவர்க்குத் தக்க திருமேனியோடு வீற்றிருந்தருளுவாராயினார்.

பரிமேலழகருரைவிளக்கம்.

200 - ம் பக்கத் தொடர்ச்சி.

ஆசிரியர் பாரத்துவாசிநச்சினார்க்கினியர் "மெய்யினியக்கமகரமொடு சிவணும்" என்னுஞ் சூத்திரவுரையில் 'இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற் போல, அகரமும் உயிர்க்கண்ணுந் தனிமெய்க்கண்ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க்கெல்லா மொப்பமுடிந்தது' எனக் கூறியதூஉம் இக்கருத்தேபற்றியாம்.

இனி 'வாமதேவமுனிவன்முதலியோர் யானே யுலகெல்லாமாயினேன் எனக்கூறுதலானும், சர்வஞானோத்தரத்தில் யானேயெல்லாமாய் அல்லனுமாய் உடனுமாய்நின்றேனென்று உயிர்கண் மேல் வைத்தோதுதலானும், உயிர்களும் இவ்விலக்கணத்தனவாவான்செல்லும்போலுமெனின்,' பாசக்கூட்டத்தினீங்கித் தனியாய் நின்று ஸோஹம்பாவனைசெய்யும் உயிர்கள் தம்மகத்து முதல்வன் புகுந்து வேற்றுமையின்றித் தோன்றலான் முத்திக்காலத்து யானே யுலகெல்லாமாயினேன் எனக் கூறவந்ததாகலின், அதுபற்றி யுயிர்களுமவ்வாறுவான் செல்லுமா றெங்ஙனமென்க.

'இவ்வொற்றுமைபற்றியன்றே அருச்சுனற்குக் கீதைநூல்செவியறிவுறுத்த கண்ணன், யானே யுலகெல்லா மாயினேனென்றதூஉம், முதல்வனது விச்சுவரூபத்தைத் தான் காட்டியதூஉம், ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுகவென்றதூஉம், அதனையுறுதியாகக்கொண்ட அருச்சுனன் அவன்கூறிய கருத்துநோக்கிச் சாங்காறுஞ் சிவபூசைசெய்ததூஉம், கண்ணன்மேல் இட்ட போதுகள் முதல்வன் திருமுடிமேற் கண்டதூஉ மென்க.'

இங்ஙனம் கூறியவாற்றான் முதல்வனும் உலகும் பொன்னும் பணியும்போல் அபேதமெனவும், ஒளியும் இருளும்போல் பேதமெனவும், சொல்லும் பொருளும்போல் பேதாபேதமெனவும் பிணங்கிக் கூறுவாரை மறுத்து, உடலுயிர் கண்ணருக்கனறிவொளிபோலும் அம்மூன்றியல்புந் தன்கட்டோன்ற நிற்கும் அத்துவிதத்துண்மை இனிது விளங்காநிற்கும் என்பதனை "... ....பொற்பணிபோலபேதப் பிறப்பிலதா யிருளொளிபோற் பேதமுஞ் சொற்பொருள்போற் பேதாபேதமு மின்றி............., உடலுயிர்கண்ணருக்கனறிவொளிபோற் பிரிவருமத் துவித மாகும்" என்னுந் திருவாக்கு வலியுறுத்தியவாற்று னறியலாம்.

"அத்துவிதமென்னுஞ் சொல்லில் அகரம் "தத்பாவந் ததந்நியந் தத்விருத்த, மெனமூன் றுகு நஞ்ஞுதற் புருடன்" என்னும் விதியால் இன்மை அன்மை மறுதலை என்னு மூன்றனு ளொன்று பயக்கும்"; அவற்றுள்:—

" இன்மைப்பொருள்கொண்ட மாயாவாதிகள் இரண்டின்மை யொருபொருண்மாத்திரையினன்றி இரண்டுமுதலியவாயெண்ணப் படும் பொருள்களினில்லாமையால், அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருள் ஒன்றென்பதேயா மெனவும்; ஒருபொருளாயினுங் குண குணியென வேற்றுமைதோன்றநிற்பிற் கேவல மொன்றுதலின்மை யின் அத்துவிதமென்ப துபசாரச்சொல்லாய் முடியுமாகலான், தன் னின்வேறு பொருபொருளுமின்றித் தானுங் குணமுடைப் பொரு ளென விசேடிக்கப்படுதலின்றி நிர்விசேடமாய்நிற்கும் பரப்பிரமப் பொருள் என்பது அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருள் என வுங் கோடலின், அவர் கேவலாத்துவிதிகளென வழங்கப்படுவர்."

" இராமாநுசர் சிவாத்துவிதசைவர் முதலியோரும் அவ்வாறே இன்மைப்பொருள்பற்றி யொன்றேயெனப் பொருள்கொண்டு, சத் தியசங்கற்ப முதலிய குணங்கள் பரப்பிரமப்பொருட்குளவென்று உபநிடதங்களிற் கூறுதலானும், அவை செயற்கைக்குணம் என்ற தற்கு ஒரியைபின்மையானும், பசுபாசங்களது உண்மையு முபநிடதங் களுள் ஓதப்படுதலானும், அவற்றோடு முரணிக் கேவலாத்துவிதமெ னக் கோடல் பொருந்தாமையின், தன்னோடியைபுடைய பசுபா சங்களானும் தன்குணங்களாய சத்தியசங்கற்பமுதலியவற்றானும் விசேடிக்கப்பட்டு விசிட்டமாய் நின்ற பரப்பிரமம் இரண்டில்லை; ஒன்றென்பதே அத்துவிதமென்னுஞ்சொற்குப் பொருளென விசிட் டாத்துவிதங் கோடலின், அவர் விசிட்டாத்துவிதிகளென வழங்கப் படுவர்."

" பேதவாதிகள் மறுதலைப் பொருள்பற்றி இரண்டன்மறுதலை யாகிய ஒன்றெனப் பொருள்கொண்டு, அங்ஙனங்கொள்ளவே அவ் வொன்றன் மறுதலையாகிய இரண்டாவது முண்டென்றற்கிழுக்கின் மையின், அத்துவிதமென்பதுந் துவிதமென்னும் பொருளைப் பயக்கு மென்று போவர்."

" அவரெல்லாரும் அத்துவிதமென்ற சொற்குப் பொருள் ஒன் றென்பதேயாம் எனக்கொண்டு தத்தம்மதங்களோடு முரணுமைப் பொருட்டுக் கேவலம் விசிட்டம் மறுதலை என்னும் அடைகூட்டி இடர்ப்பட்டுப் பொருள்கொள்வர். அவருண் மாயாவாதிகூறுங் கேவ லமும், பேதவாதிகூறும் மறுதலையுஞ் சுருதியோடு முரணுதலின், ஈண்டைக் கேலாவாம். ஏனையோர்கூறும் விசிட்டம் என்பது பொரு ந்துமாயினும், அத்துவிதமென்னுஞ்சொற்குப் பொருள் ஒன்றெனக் கோடல் பொருந்தாது. என்னை? ஒன்றென்பது பொருளாயின் ஒன்றெனவே விளங்கக்கூறலமையும்; அவ்வாறன்றி அத்துவிதமென வுய்த்துணரவைத்தோதவேண்டாமையானும், ஒன்றெனப் பொருள் கொள்ளின் மாவாக்கியப்பொருள் பயப்பதோர் விசேடமின்மையின் அத்துவிதமென்றதுபற்றி ஆண்டொருபயன்படாமையானும்; என்க."

" மற்றென்னையோ அத்துவிதமென்னுஞ் சொற்குப் பொருளெ னின், சித்தாந்தசைவ ருரைக்குமாறுகாட்டுதும்: அது நீயாகின்றாய்

எனவும், அது நானுகின்றேன் எனவும், அதுவதுவாகின்றது எனவு மூவிடம்பற்றி நிகழுங் " தத்துவமசி " முதலிய மாவாக்கியங்களைக் கேட்டவழி, 'அதுவென்பதொருபொருள் நீயென்பதொருபொரு ளாகலின், ஒருபொருள் மற்றொருபொருளாமாறு யாங்ஙனம்' என்னு மைய நீக்குதற்கெழுந்ததாகலின், அதுவதுவாதற்கேதுவாய் அவ் விரண்டற்கு முளதாகிய சம்பந்தவிசேடமுணர்த்துதலே அத்துவித மென்னுஞ் சொற்குப் பொருளென்றுணர்ந்துகொள்க."

" அற்றேல், அத்துவிதமென்னுஞ் சொல்லாற் பெறப்படுஞ் சம் பந்தம் ஐக்கியமோ, தாதான்மியமோ, சமவாயமோ, சையோ கமோ, சொரூபமோ, வேறோ வெனக் கடாவிஞர்க்கு, ஆற்றுநீருங் கடனீருந் தம்மிற்சேர்ந்தாற்போலவும், குடாகாயமு மகாகாயமுந் தம்மிற்சேர்ந்தாற்போலவும் ஐக்கியமெனின்; அங்ஙனஞ் சேர்ந்தவழி யொருபொருளேயாதலின், ஒன்றெனவேயமையும்; அத்துவிதமென வுய்த்துணரவைத்தோதவேண்டா; அன்றியும், ஒன்றுபவழி அது வதுவாய்நின்றறிதலாகிய ஆன்மவிலக்கணம் முத்திக்காலத்தில்லை யெனப்பட்டு வழுவாமாகலின், அது பொருந்தாமையானும்; குண குணிகட்குத் தம்மினுளதாகிய சம்பந்தம்போலுந் தாதான்மிய மெனின், ஆன்மா முதல்வனைப்போலக் குணகுணிப்பொருளாய் நிற்ப தன்றி முதல்வனுக்குக் குணமாகாமையான், அவ்வாறியைதல் கூடா மையானும், தாதான்மியத்தின் வேறாய் நையாயிகர் கூறுஞ் சமவாய மென்பதொன்றின்மையானும்; விரலும்விரலுஞ் சேர்ந்துநின்றாற் போலச்சையோக மெனின், அவ்வியாப்பியவிருத்தியாகிய சையோ கம் வியாபகப்பொருள்கட்குக் கூடாமையானும்; யாதானுமோரியைபு பற்றிக் கூறப்படுஞ் சொரூபமெனின், அது மாவாக்கியப்பொருளை வலியுறுத்துதற் கெழுந்த அத்துவிதமென்னுஞ்சொற்குப் பொரு ளாகாமையானும்; சொரூபசம்பந்தமாத்திரையிற் சிவானந்தத்தை யனுபவித்தல்கூடாமையானும்; இவற்றின்வேறு யின்னதென்றறிய வாராத அநிர்வசநமெனின், அங்ஙனங் கூறுதல் மாயாவாதி கூற்றாய் வழுவாமாகலானும்; அவையெல்லா மீண்டைக்கேலாமையின் வேறு விடுக்குமா றென்னையெனிற் கூறுதும்: ஒருபொருளே அவயவாவய விகளாயாதல் குணகுணிகளாயாதல் வேற்றுமைப்பட்டிரண்டாய்நிற் றற்கேதுவாகிய தாதான்மியமும், அதுபோல இருபொருளே யது வதுவாயொற்றுமைப்பட்டொன்றாய்நிற்றற்கேதுவாகிய தாதான்மிய முமெனத் தாதான்மியசம்பந்த மிருவகைப்படும்; அவற்றுள் முன்னை யது தாதான்மியமென்றும், பின்னையது அத்துவிதமென்றும் வழங் கப்படும்; அத்துவித மென்னுஞ் சொல்லியல்பு மேற்கூறியவாற் றான் வேறுபொருள் தருமாறின்றி (அப்பிராமணனென்றாற்போல) அன்மைப்பொருள்பற்றி இரண்டன்றென வேற்றுமைப்படாமை யைவிளக்கிநிற்றலாமென்க."

இதுவே சந்தாநகுரவர்களாகிய மெய்கண்ட சிவாசாரியர் உமா பதிசிவாசாரியர் இவர்கள்கருத்தாமென்பதனை முறையே " அத்து

விதமென்ற சொல்லே அந்நியநாத்தியை யுணர்த்து மாயிட்டு" என வோதிபதனானும், "பிரிவருமத்துவிதமாகுஞ் சிறப்பினதாய்" என வுடம்பொடுபுணர்த் தோதியதனானும் அறியலாம்.

"இவ்வத்துவிதம், அபேதசம்பந்தமாகிய ஐக்கியமுமன்றி, பேதாபேத சம்பந்தமாகிய தாதான்மியமுமன்றி, பேதசம்பந்தமாகிய சையோகமுமன்றி, கலப்பும் உடனாதலும் வேறாதலுமாகிய மூன்றுந் தன்கட்டோன்ற நிற்றல்பற்றி, அம்மூன்றற்கும் பொதுவாகக்கூறப்படுமாதலான்; இவ்வத்துவிதத்திற் கொவ்வோரிடங்களின் 'அலைகடலிற்சென்றடங்கு மாறுபோல்' எனவும் 'வானகத்தில்வானுமணத்தில் மணமும்போல்' எனவும் அபேதவுவமையும், 'பண்ணையுமோசையும்போலப் பழமதுவு, மெண்ணுஞ் சுவையும்போல்' எனவும் 'நீருமிரதமும்போ, லாங்கா ணாரணாருள்' எனவும் பேதாபேதவுவமையும், 'இரும்பைக்காந்தம்வலித்தாற்போ லியைந்து' எனப் பேதவுவமையும் ஒருபுடையொப்புமைபற்றி எடுத்துக்காட்டுபவாகவின், இங்ஙனம் தம்முன்முரணுவனபோல வேறுவேறு எடுத்துக்காட்டுதல்பற்றி மலையற்க. இம்மூன்றியையுந் தன்கட்டோன்ற இவற்றிற்குவேறாய்நிற்கும் அத்துவிதத்திற்குச் சிறந்தெடுத்துக்காட்டப்படு முவமையாவது ஆன்மபோதமுங் கண்ணொளியுந் தம்முள் அத்துவிதமாய் நிற்றலா மென்க." "காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம்போற், காணவுள்ளத்தைக் கண்டு காட்டலின்" என மெய்கண்ட சிவாசாரியரும், "காட்டக்கண்டிடுந் தன்மையுடையகண்ணுக், கேயுமுயிர் காட்டிக்கண்டிடுமாபோல வீசனுயிர்க்குக் காட்டிக்கண்டிடுவன்" என அருணந்திசிவாசாரியரும், "அறிவொளிபோற் பிரிவருமத்துவிதமாகும்" என உமாபதிசிவாசாரியரும் சித்தாந்தமுடிபுணர்த்தும்வழி இதனையே எடுத்துக்காட்டியவாற்றானும் அறியலாம்.

"இவ்வத்துவிதம் ஏனையோர்கூறும் அத்துவிதம்போலக் கேவலம் என்றுதல், விசிட்டம் என்றுதல், மறுதலையென்றுதல் யாதானும் ஒன்றான் விசேடிக்கப்பட்டுநின்று பொருளுணர்த்தாது சுத்தமாய்நின்றே பொருளுணர்த்துதலின் சுத்தாத்துவிதமென வழங்கப்படும்"

"ஈண்டுச் சுத்தமென்றது யாதொன்றானும் விசேடிக்கப்படாது நிற்றலை; அது விசிஷ்டசத்தை சுத்தசத்தை யெனத் தார்க்கிகர் கூறும் வாய்பாட்டா னறிக."

"இங்ஙனம் ஒருபொருளிருதன்மையான் வியாபகமும் வியாப்பியமுமாய் வேற்றுமைப்பட்டுநிற்குந் தாதான்மியம்போல, வியாபகமும் வியாப்பியமுமான இருபொருளொருதன்மையாலொற்றுமைப்பட்டு நிற்குந் தாதான்மிய சம்பந்தமொன்றுண்டெனவும், அதுவே அன்மைப்பொருள்பற்றி அத்துவிதமென்னுஞ் சொல்லானுணர்த்தப்பட்டதெனவும் அறியமாட்டாதார் அத்துவிதம் என்னுஞ்சொற்குத் தத்தமக்குவேண்டியவாறு பொருளுரைப்பர்."

III. "தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கு முதலா தல்நோக்கி 'எழுத்தெல்லாம்' என்றார்."

வடவெழுத்துத் தமிழெழுத்தினுஞ்சிறந்தமை தோன்ற உம்மை கொடுத்தார். தென்மொழி வடமொழிகளை மகேச்சுரரால் முறையே அகத்தியனாரும் பாணினியாரும் ஓதியுணர்ந்தமையானும், அவ்விருமொழிகளும் எல்லாப் பாஷைகளுக்குங் காரணமாக நிற்றலானும் 'தமிழெழுத்து' 'வடவெழுத்து' என்றார். இக்காரணத்தால் தமிழெழுத்தும் வடவெழுத்தும் அநாதியாய் ஆரிஷமாயினவென்பது தானே விளங்கும்.

IV. "ஆதிபகவன் என்னு மிருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு."

வடநூன்முடிபாகலின் இயல்பாயிற்று, தமிழ்நூன்முடிபாயின் "அவற்றுள், இகரவிறுபெயர் திரிபிடனுடைத்தே" என்னும் விதியால் நம்பிக்கொற்றன், நம்பிச்சாத்தன், நம்பிப்பிள்ளை என்பன போல ஆதிப்பகவன் என வல்லொற்றுமிக்குவரும்.

V. "உலகு என்றது ஈண்டுயிர்கண்மேனின்றது."

உலகு என்னுஞ்சொல் சேதநம் அசேதநம் என்னும் இருகூற்றுப் பிரபஞ்சத்தையுங் குறிக்கத்தக்கது. ஆயினும் சேதந பிரபஞ்சமொன்றே ஆதிபகவன் தமக்கருள்வழங்குஞ் சச்சிதானந்த முழுமுதல்வனென்றறிந்து அவனாணைவழியொழுகிப் போகமும் வீடுபேறும் பொருந்துமுரிமையுடையதென்பார் 'உலகென்றது ஈண்டுயிர்கண்மேனின்றது' என்றார். என்றாரேனும்; சேதநபிரபஞ்சத்தையொட்டிநின்றே ஆதிபகவனாணையாற்றானே தோற்ற நிலையிறுதிகளைப் பெறுதலால் அசேதந பிரபஞ்சமுங் கொள்ளத்தக்கதேயாம். அங்ஙனங்கொள்ளின் உயிரும் மெய்யும் ஆகிய எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையனவாதல்போல, சேதநமும் அசேதநமும் ஆகிய இருகூற்றுப் பிரபஞ்சமும் ஆதிபகவனாகிய முதலையுடைத்தாதல் நன்குவிளங்கும். இவ்வுண்மையை "ஸர்வாவராணாம் ஜகதாம் ஶிவோ தேவ ப்ரதாந உச்யதே | தேவத்வம் விநா நாஸ்தி ஸர்வாக்ஷராணாமகாரவத்" "ஶிவஸ்யைவாஸ்ய ஜகதோऽக்ஷராணாமகாரவத்" என்னும் வடநூன் மேற்கோள்களான் அறியலாம்.

VI. "காணப்பட்டவுலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மைகூறவேண்டுதலின் 'ஆதிபகவன் முதற்றேயுலகு' என வுலகின்மேல் வைத்துக்கூறினார்; கூறினாரேனும் உலகிற்குமுதல் ஆதிபகவனென்பது கருத்தாகக்கொள்க."

காணப்பட்டவுலகம் = சுட்டுணர்வாலறியப்பட்டவுலகம். [சுட்டுணர்வு = பசுபாசங்களின்ஞானம்.] காணப்படாத கடவுள் = சுட்டுணர்வாலறியப்படாத கடவுள். உண்மை = உளதாந்தன்மை. முதல் = முதற்காரணம்.

சுட்டியறியப்படும்பொருள் அசித்தும் அசத்துமாமெனச் சுருதிகள் முறையிடுதலால், அதுவே தோற்றநிலையிறுதியென்னு *முத்தொழிற்பட்டவழிச் சுட்டுணர்விற்கு விடயமாந்தன்மைத்தாமென்பார் 'காணப்பட்டவுலகம்' என்றார்.

சச்சிதானந்தரூபனாகிய இறைவன் சடமாயழிந்துபோதலின்மையால் சுட்டியறியப்படும் பொருளுமன்று; அநிர்வசநீயமெனப்படும் சூனியமன்மையால், ஒருவாற்றானும் அறியப்படாதபொருளுமன்று என்பார் 'காணப்படாத கடவுள்' என்றார்.

காரியமாகிய உலகிற்குக்காரணமாகிய கடவுள் உண்டென்னும் ஆகமப் பிரமாணத்தை வலியுறுத்துவதாய அநுமானப் பிரமாணத்தாலறிகவென்பார் 'காணப்பட்ட வுலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின்' என்றார்.

உயிர்க்குயிராய்நின்று உணர்த்து முகத்தான் தனுகரணாதிகளைக் கொடுப்போனும் முதல்வனேயாவனென்பதை அறிவுறுத்தற்பொருட்டும், உலகிற்குமுதல் அணுவெனவும் காலமெனவும் கேவலமாயையெனவுங் கூறுவாரது மதங்களை மறுத்தற்பொருட்டும் 'உலகிற்குமுதல் ஆதிபகவனென்பது கருத்தாகக்கொள்க' என்றார்.

'ஆரியன்குலாலனாய்நின்றாக்குவனகிலமெல்லாம்' எனச் சுருதி கூறுகின்றமையானும்; குடத்திற்கு நிமித்தனாகிய குலாலன் முதற்காரணமாகிய மண்ணின்தன்மையைப் பெறாததுபோல, உலகிற்கு நிமித்தனாகிய முதல்வன் முதற்காரணமாகிய மாயையின் தன்மையைப் பெறாமையானும்; குலால குவிந்தர்கள் தாமே மண்ணாகவும் நூலாகவுமிருந்து கடபடாதிகளாகத் தோன்றாமைபோல, முதல்வன் தானே மாயையாக நின்று உலகாகத் தோன்றாமையானும்; கடபடாதிகள் தாமே குலாலகுவிந்தர்களினின்றுந் தோன்றாமைபோல, உலகம் தானே முதல்வனிடத்திலிருந்தும் தோன்றாமையானும்; குடத்திற்கு நிமித்தம்வேறும் முதல்வேறும் வேண்டப்படுதல்போல, உலகிற்கு நிமித்தம்வேறும் முதல்வேறும் வேண்டப்படுமாகலான் உலகிற்கு ஆதிபகவன் நிமித்தமும் மாயை முதலுமாமேயன்றி ஆதிபகவன் முதலாகான் எனின், அற்றன்று: "யதொகேந ம்ருத்பிண்டேந ஸர்வம் ம்ருந்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத்" என்னுஞ் சுருதி மண்ணொன்றையறிந்தமாத்திரத்தில் (அதன் காரியமாகிய) கடாதிகளும் மண்மயமாகவே அறியப்பட்டனவாகின்றன; அதுபோல முதல்வனை யறிந்தமாத்திரத்தில் இந்தப் பிரபஞ்சமெல்லாம் அவனாகவே அறியப்பட்டதாகின்றது என உபதேசிப்பதனால், நிமித்தர்களாகிய குலாலகுவிந்தர்களை யறிந்துங் கடபடாதிகளை அவர்களாகக் காண்டற்காகாமையும், முதலாகிய மண் நூல்களை யறிந்தால் கடபடாதிகளை அவைகளாகக்காண்டற் காதலையும்போலாது, நிமித்தனாகிய முதல்வனையறிந்த மாத்திரத்தில் உலகெலாமவனாகவே காணப்பட்டதாகின்றமையால் உலகத்திற்குமுதல் ஆதிபகவனென்பது

இனிதுவிளங்காநிற்கும். அன்றியும், "ததைக்ஷத | பஹு ஸ்யாம் ப்ரஜாயேய இதி" என்னுஞ்சுருதி அதுஎல்லாமாவோமெனச்சங்கற்பித்ததுஎனவும், "விஶ்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:" என்னுஞ்சுருதி மஹர்ஷியாகிய உருத்திரன் உலகினையிறந்துநின்றவன் எனவும், "ஸர்வோ வை ருத்ர:" என்னுஞ்சுருதி உலகெலாமாய் நின்றவன் உருத்திரன் எனவும் உபதேசிக்கின்றமையானும், உலகிற்குமுதல் ஆதிபகவனென்பது தெற்றென விளங்காநிற்கும். இஃதன்றியும், "மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந்மாயினந்து மஹேஶ்வரம் | தஸ்யாவயவ பூதைஸ்து வ்யாப்தம் ஸர்வமிதம் ஜகத்" என்னுஞ் சுருதி மாயையே முதற்காரணமென்றறிக, மாயையையுடையோன் மகேச்சுரன், அவனது அவயவமாகிய அதனால் இந்த வுலகமெல்லாம் வியாபிக்கப் பெற்றது என வுபதேசித்தமையானும்; "உலகவனுருவிற் றோன்றி யொடுங்கிடும்" என்னுந்திருவாக்கானும்; கேவலங்கிழங்கினின்றுவது சேற்றினின்றுவது தாமரை யுண்டாகாததுபோல, கேவலம் மாயையினின்றுவது மகேச்சுரனினின்றுவது உலகமுண்டாவதில்லையாகலான்; சேற்றின்கண் கிழங்குள்ளதாக அதினின்றுந் தாமரைதோன்றுமாறுபோல, இறைவனது சத்தியின்கண் மாயையுள்ளதாக அதினின்றும் உலகந்தோன்றுதலின், ஆதிபகவற்கே முதற்காரணத்துவமும் உரித்தாதலறியலாம். இங்ஙனங் கூறியவாற்றால் நிமித்த காரணனாகிய முதல்வன் உலகிற்கு முதற்காரணனல்லனாயினும் முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய் நிற்றலின் 'உலகிற்கு முதல் ஆதிபகவன்' ஆதல் நன்குவிளங்கும்.

[சேற்றின்கண் கிழங்குள்ளதாக அதினின்றுந் தாமரைதோன்றியதை 'பங்கஜம்' என்னுஞ் சொல்லியல்பானும், இறைவனது சத்தியின்கண் மாயையுள்ளதாக அதினின்றும் உலகந்தோன்றியதை 'விஶ்வகாரணம்' என்னுஞ் சுருதிவாக்கியத்தானு மறியலாம்.]

அற்றேல், சச்சிதாநந்த மங்களரூபனாகிய முதல்வன் அநிருத சடதுக்க ரூபமாகிய உலகிற்குக் காரணமாயின் விகாரப்பட்டுநின்று அதனிற் பந்தமுறுவான்போலுமெனின், அம்முதல்வன் இறப்பு நிகழ்வு எதிர்வு முதலியனவாய் வேறுபட்டு எல்லாத்தொழிலும் செய்தும் தனக்குவிகாரமின்றிநிற்கும் காலம்போல விகாரப்படாது நின்று, பிரபஞ்சத்தைக் கரணங்களாற்படையாது சங்கற்பமாத்திரத்தானே படைத்து, அவ்வாறே காவாதுகாத்து அழியாதழித்தலான், கற்றநூற் சொல்லும் பொருளும் உள்ளத்திற்றோன்றுங்கால் உள்ளம் அவற்றிற்றொடக்குண்ணுதவாறுபோலவும், கனவின்கட் கண்டவற்றைப் புறத்து விடயங்களையறிந்துவந்த நனவுணர்வின் கண்ணே விளங்க அறிந்தவன் அப்பொழுது அவற்றிற்றொடக்குண்ணுதவாறுபோலவும், பந்தமுமின்றி அமலனாகவே விளங்கிநிற்பன் எனவறிக.

ஈண்டுப் பகவனெனப்படுவோன் "யோ வை ருத்ரஸ் ஸ பகவாந் ஸ்கந்தஸ்தஸ்மை வை நம:" என்னும் சுருதிப்படி உருத்திரனேயாவன். எங்ஙனமெனின், "அத கஸ்மாதுச்யதே பகவாந் யஸ்மாத் ஸர்வாந் பாவாந் நிரீக்ஷதி ஜ்ஞாநம் யோகம் கமயதி தஸ்மாதுச்யதே பகவாந்" என்னுஞ் சுருதிப்படி எல்லாவற்றையுமறிகின்றவனும், உயிர்கள் தன்னையறியவும் தனது ஞானத்தையும் யோகத்தையும் அடையவும் செய்கின்றவனும் அவனேயாகலானும், "ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸஶ்ஶ்ரிய: । ஜ்ஞாநவைராக்யயோஶ்சைவ ஷண்ணாம் பக இதீரணா" என்னும் புராணவசனப்படி ஐசுவரியம் வீரியம் புகழ் திரு ஞானம் வைராக்கியம் என்னும் ஆறு குணங்களையுடையவனும் அவனேயாகலானு மென்க.

[ஈண்டு உருத்திரனென்றது மாசங்காரக்கடவுளாகிய பரம சிவனை; அவனுக்கும் உருத்திரனென்னும் பெயருண்மையின். உருத்திரன் என்னுஞ் சொற்கு வேதங்களாலும் வேதாந்தமுணர்ந்த பெரியோர்களாலுஞ் சொல்லப்படும் பொருளாவது: சம்சார துக்கத்தினின்றுந் தாண்டச்செய்கின்றவன் என்பதாம். இதனை "ருதம் து:கந் தத் ஸம்ஸாரது:கம் த்ராவயதி ருத்ர: । ருத்ர இத்யுச்யதே தேவோ வேதாந்தவேதிபி:" என்னுஞ் சுலோகத்தா னறிக. ஐசுவரியமுண்மைக்கு ஈஸ்வரபதச்சுருதியும், வீரியமுண்மைக்கு உக்கிரபதச்சுருதியும், புகழுண்மைக்குச் சிவபதச்சுருதியும், திருவுண்மைக்குச் சம்புபதச்சுருதியும், ஞானமுண்மைக்குச் சர்வஜ்ஞபதச்சுருதியும், வைராக்கியமுண்மைக்குக் காமரிபுபதச்சுருதியும் பிரமாணங்களாம்.]

அதர்வணவேதம் சிவநாமங்களுள் பகவந் என்னும் நாமந் தலைப்பெய் தெடுத்தோதியதனானும், சுவேதாஸ்வதரம் சிவபிரானைப் பகேசனென்றெடுத்தோதியதனானும், பகவந்நாமப் பொருளாயுள்ளோன் ஸ்ரீ பரமசிவப்பிரபுவென்றே யறியலாம். இன்னும் இதனுண்மையை பௌஷ்கராகம விருத்தியினும், சதுர்வேத தாத்பரிய சங்கிரகத்தினும், சிகரிணீமாலையினும் விளங்கவறியலாம்.

இனி மெய்யுணர்வெய்திய தேவர் முனிவர் முதலியோரைப் பகவனென்னும் பெயரால் வழங்குவது அவர்மாட்டு விளங்கும் பரமசிவவிபூதியினியைபுபற்றியாகலின் அஃதுபசாரமேயாமென்ப.

VII. "ஏகாரந் தேற்றத்தின்கண் வந்தது."

தேற்றம் = தெளிவு.

VIII. "இப்பாட்டான் முதற்கடவுளதுண்மை கூறப்பட்டது."

படைப்பு முதலிய தொழில்களைப்புரியும் நான்முகன் முதலியோரையும் உண்ணின்று பிரேரிக்கும் முதல்வன் ஒருவனுளனாதலைக் குறிப்பிப்பான் 'முதற்கடவுளதுண்மை கூறப்பட்டது' என்றார்.

ஈண்டு முதற்கடவுளாவார்-"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே। யேந ஜாதாநி ஜீவந்தி। யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி। தத்விஜிஜ்ஞாஸஸ்வ। தத் ப்ரஹ்மேதி" என்னுஞ்சுருதி இந்தப்பூதங்கள் தோன்றி நின்றொடுங்கப்பெற்றதெதுவோ அதுவேபிரமமாமென வுபதேசிக்கின்றமையானும்; "லீலாஸாதநஸம்பூதா ப்ரஹ்மாத்யா: பஶவ: ப்ரபோ: । ஸர்வஜ்ஞோ யத: ஶம்பு: ஸ்ருஜத்யவதி ஹந்தி ச ।" என்னும் மேற்கோள் அந்தப்பிரமன்முதலியபசுக்கள் பிரபுவுக்கு லீலா சாதனங்களாக இருக்கின்றமையால் இந்த ஸர்வஜ்ஞான ஶம்புவானவர் தோற்றநிலையிறுதிகளைச் செய்கிறார் எனவும், ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ரா: ஸம்ப்ரஸூயந்தே। ஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹ பூதைர்ந காரணம் । காரணாநாம் த்யாதா । காரணந்து த்யேய: ஸர்வைஶ்வர்யஸம்பந்ந: ஸர்வேஶ்வர: ஶம்புராகாஶமத்யே" என்னுஞ்சுருதி பூதங்களும் இந்திரியங்களும் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்திரர்களும் உண்டாக்கப்படுகிறார்கள்; (அவர்கள் முறையே) காரணங்களைத் தரித்தலானும் தியாதாவாதலானுங் காரணர்களாகார் (ஆகலின்) சர்வைஸ்வரியங்களை யுடையவரும், சர்வேஸ்வரரும், ஶம்புவும், தகராகாசமத்தியில் த்யேயராக நிற்பவரும் (எவரோ அவரே) காரணர் எனவும் உபதேசிக்கின்றமையானும் பரசிவம் பிரமமென்னப்பட்டு, ஒரு திரிவுமின்றி அநாதிமுத்த சித்துருவாக நின்ற ஸ்ரீசிவபெருமானேயாவர்.

வேதத்துள் "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்" "ஹிரண்யகர்ப்ப: ஸமவர்த்ததாக்ரே" "இந்த்ர: ஶ்ரேஷ்டோ தாத:" "அக்நிரவமோ தேவதாநாம்" "ஸூர்ய ஆத்மா ஜகதஸ்தஸ்துஷஶ்ச" என்பவை முதலிய காரணவாக்கியங்களிற் சுட்டுணர்வினராகிய நாராயணன் இரணியகருப்பன் இந்திரன் அக்னி சூரியன் முதலியோரைக் காரணர்களென்றது குயவன்போல அவாந்தர காரணமாதல் பற்றியே. ஆகலின் அவையெல்லாம் ஆகுபெயரால் முதற்கடவுளையே யுணர்த்தி நிற்கும். ஆகலான் செய்தும் செய்வித்தும் எல்லாத்தொழிற்கும் வினைமுதலாய் நிற்பவனே முதற்கடவுளாம்.

"அகரமுதலவெழுத்தெல்லாம்" என்னுமுபமானம் பலகலையாகம வேதங்களைப் பிரளயந்தோறும் முறைபிறழாது கூறுகின்றவனும், பலகலையாகம வேதார்த்தமாயுள்ளவனும், பலகலையாகம வேத ப்ரமாணங்களாலறியப்படுபவனும் எவனோ அவனே உலகிற்கு முதற்கடவுளாமென வுய்த்துணர வோதியதூஉம், "ஆதிபகவன்முதற்றேயுலகு" என்னுமுபமேயம் முதல்வன் இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாகிய உலகம் விளங்கித்தோன்றுவான் அதனோடு விரவிநிற்பன் என இறைவனது தடத்தவிலக்கணங் கூறியதூஉமாம்.

முதல்வன் பிரபஞ்சோற்பத்தியினிமித்தம் 'உலகெலாமாகி வேறாயுடனுமாய்' நிற்றல் தடத்தவிலக்கணமெனவும், தன்னுண்மையில் சிவசத்தாகிய சச்சிதாநந்தமாய் நிற்றல் சொரூபவிலக்கணமெனவுஞ் சுருதிகூறுமாற்றா னறியலாம்.

இனி, "அகரமுதலவெழுத்தெல்லாமாதி, பகவன்முதற்றேயுலகு" என்னுந் திருக்குறளின் முதற்பாவிற்குத் திரண்டபொருள்: "ஆன்மாவுக்கு அறிவுசெயல்கள் விளங்குதலும் விளங்கியபின் விடயத்திற்சென்று பற்றுதலும் இறைவன் திருவடியையின்றி யமையமாட்டா; அதுபற்றி இறைவனும், அக்கரங்களை இயக்குதற்பொருட்டு அவற்றுடன் கலந்துநிற்கும் அகரம்போல, அறிவுசெயல்கள் விளங்குதற்பொருட்டு உயிர்களோடுங் கலந்து நிற்பன். அங்ஙனம் விளங்கிய அறிவுசெயல்கள் பின்விடயத்திற்சென்று பற்றுதற்பொருட்டு அவ்வுயிர்களை அதிஷ்டித்துக்கொண்டு அவைசெல்லுமாறெல்லாம் அறிந்து செலுத்தி அவ்விடயங்களினுமுடனாகக் கலந்துநிற்பன். ஆகலான் ஆணவமலத்தினீங்கி வேறுநின்றவுயிர்கள் அதுபோல இறைவனைவிட்டுத் தனித்து நிற்றல் ஓரிடத்துமில்லை" என்றறிந்து அடங்குவர் மெய்யுணர்வினிலைபெற்றுயர்ந்தோர் என்பதாம்.

இஃதிப்பொருட்டாதல் அடியில்வரும் அருணந்திசிவாசாரியருடைய அருமைத்திருவாக்கானும் அறியலாம்:—

"எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை
யறிந்தியற்றி யிடாவுயிர்க ளிறைவன் றானுஞ்
செவ்விதினி னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப
னிவ்வுயிர்க டோற்றும் போதவனையின்றித் தோற்றா
விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு
மவ்வுயிர்போ னின்றிடுவ னாத லானு
மானடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே."

வள்ளுவர் நூலின் வருமுதற் பாவிற்குத்
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—விள்ளச்
சிவஞான பாடியத்தாற் சிற்றுரையாற் றந்தான்
அவஞானந் தீரவிளக் கம்.

"வணங்கி வாழ்த்தி மதிப்பரும் பொருளை
வணங்கி வாழ்த்தி மதித்துமன் பெரிதே."

பா. கங்காதர தேவர்,
ஆயுர்வேத பண்டிதர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானபோத நூலுரைகள்

வசனமாக்கப்பட்டன.

சைவசித்தாந்த மகா சமாசத்தினர் முதலிய சமாசியர்கள் வருடந்தோறுங் கூட்டுஞ் சிறந்த பிரசங்க சபைகளிலும் பிறசபைகளிலும் சைவமகோபந்நியாசங்கள் செய்தலினாலும், அவ்வுபந்நியாசங்களை அச்சிட்டு வெளிப்படுத்துதலினாலும், சிவஸ்தலயாத்திரைசெய்து சிவவழிபாடு இயற்றுதலினாலும், சைவதீக்ஷை பெற்றுச் சிவபூசை செய்தலினாலும், இன்ன பிறவற்றாலும் சைவ சமயாபிவிருத்தி செய்தலையே பொழுது போக்கும் விளையாட்டாகவுடைய சிவஞானச் செல்வியாராகிய ஸ்ரீமதி - ஆண்டாளம்மையார் எனப் பெயரிய மங்கையர்க்கரசியார், சிவஞானபோத மூலமும் உரையும் கற்றுவல்ல விற்பனர் தாமும் உற்றுநோக்கினு முற்று முணரமுடியாத வத்துணைக்காடின்னிய மேம்பாட்டு நடைத்தாயிருத்தலான் நம்மவர்கள் தங்கள் சமய வுண்மையை அறியமாட்டாராய் அஞருறுதலைப் பலவிடங்களினும் பலவாற்றானுங் கண்டு கேட்டு நன்கினிதறிந்து அக்குறையை நீக்கி உபகரித்தல் வேண்டுமெனத் தமதுள்ளத்தே யுதித்தூன்றி ஒருகாலைக் கொருகால் வளர்ந்தோங்குங் கருணைமாண்பால், சித்தாந்த ஞானபாநுவெனச் செகப்பிரசித்திபெற்ற காசிவாசி-ஸ்ரீலஸ்ரீ-செந்திநாதையரவர்களைக்கொண்டு மேற்படி நூலுரைகளை யாவரு மெளிதினுணருமாறு வசனநடையில் "சிவஞானபோத வசனாலங்காரதீபம்" எனப் பெயரிய நூலாக இயற்றுவித்துச் சென்னைச் சைவ வித்தியாநுபாலன யந்திரசாலையில்

அச்சிற் பதிப்பிக்கின்றார். அந்நூன்மாட்சி அதன் பெய ரானே விளங்கக் கிடத்தலின் ஈண்டு விரிக்காது விட்டனன். சைவசமயிகட்கெல்லாஞ் சீவரத்தினம்போன்ற இந்தச் சிவ ஞானசாஸ்திரத்தில் ஒவ்வொன்று ஆண்பாலார் பெண்பா லார் யாவரிடத்தும் இருக்கவேண்டும்; அவர்கள் எல்லாரும் ஒவ்வொன்று திருவருட்பேற்றிற்கிலக்காக வாங்கி ஷை அம் மையார் பிரகடனஞ்செய்ய உத்தேசித்திருக்கும் அரிய நூல் களெல்லாவற்றையும் அங்ஙனஞ்செய்விக்கும்படி ஊக்கஞ் செய்து புகழ்புண்ணியங்களை ஒருங்குபெற்றின்புறுவார்கள் என்று உறுதியாக நம்புகின்றேன். இத்தகைய அரும் பெருஞ் செயல்களை மனவாக்குக் காயங்களினாலும் பெரும் பொருளினாலும் சிறப்புற முற்றுவித்துச் சைவசமயிகட்கோர் மெய்வருநிதியாய் விளங்கும் இவ்வம்மையார் என்றும் நிலவி இத்தகைய நன்மைகளை எம்மவர்க்குச் செய்யுமாறு உத்த மத்தலைவராகிய அர்த்தநாரீசுரரது உபயபாதங்களைச் சிர மேற்கொண்டு சிந்தித்து வந்திக்கின்றேன். இதன்விலை அச் சிட்டு முடிந்தபின்னர் வேறுவிளம்பர வாயிலாகத் தெரிவிக் கப்படும். இந்நூல் முடிவெய்தியபின் அடியிற்குறித்தவரிடம் கிடைக்கும்.

இங்ஙனம்,

எழுகரைநாட்டுநம்பி,

சதாசிவபண்டித சிவாசார்யர்,

மடாதிபதி - திருச்செங்கோடு.

☞ C. S. ஏகாம்பர முதலியார்,

44, சாமிநாய்க்கன் வீதி,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.